# *இலண்டன் தமிழ் நிலையம் - திருக்குறள் போட்டி 2023*

ஏ பிரிவு

| ஏ பிரிவு | ஆண்டு 10,11,12,13 | Year10,11,12,13 |
|---|---|---|

**(ஏதேனும் இரு குறள்களுக்குப் பொருள் கூறவும்)**

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று -236

*ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பதே நல்லது. If you are born (in this world), be born with qualities conductive to fame from those who are destitute of them it will be better not to be born.*

பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - 322

*இருப்பதைப் பகிர்ந்து உண்டு, பல உயிர்களையும் பாதுகாப்பது, நூல் எழுதியவர்கள் தொகுத்த அறங்களுள் எல்லாம் முதன்மையான அறமாகும். The chief of all (the virtues) which authors have summed up, is the partaking of food that has been shared with others, and the preservation of the manifold life of other creatures.*

அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்

தொகைஅறிந்த தூய்மை யவர் 711

*சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக்களத்தின் தன்மை அறிந்து ஏற்றச் சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும். Let the pure who know the arrangement of words speak with deliberation after ascertaining (the nature of) the court (then assembled).*

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்

பகைவர்கண் பட்ட செருக்கு – 878

*செய்யும் வகையை அறிந்து தன்னை வலிமைப்படுத்திக் கொண்டு தற்காப்புத் தேடிக் கொண்டால், பகைவரிடத்தில் ஏற்பட்ட செருக்குத் தானாவே அழியும். The joy of one’s foes will be destroyed if one guards oneself by knowing the way (of acting) and securing assistance.*

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்

நிலையின் இழிந்தக் கடை - 964

*நல்ல குடும்பத்தில் பிறந்தவர் மானம் காக்காமல் தம் உயர்ந்த நிலையை விட்டுவிட்டுத் தாழ்ந்தால், தலையை விட்டு விழுந்த மயிரைப் போன்றவர் ஆவார். They who have fallen from their (high) position are like the hair which has fallen from the head.*

நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்

பண்புபா ராட்டும் உலகு - 994

*நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்லப் பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர். The world applauds the character of those whose usefulness results from their equity and charity.*

நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்

நச்சு மரம்பழுத் தற்று - 1008

*எவராலும் விரும்பப்படாதவனின் செல்வம் ஊரின் நடுவே நின்ற நச்சு மரம் பழுத்தது போலாம். The wealth of him who is disliked (by all) is like the fruit-bearing of the etty tree in the midst of a town.*

இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர் கரவாது

கைசெய்தூஉண் மாலை யவர் - 1035

*தம் கையால் உழுது உண்ணும் இயல்பை உடையவர் பிறரிடம் பிச்சை கேட்கமாட்டார்; தம்மிடம் கேட்டு வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கவும் செய்வர். Those whose nature is to live by manual labour will never beg but give something to those who beg.*